**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**O.S.No.110/2010**

2025 ஆம் வருடம் மார்ச் மாதம் 24 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. S. ஜெயராமன் (வா.சா.2) | தொழில் | : | வழக்கறிஞர் |
| த/பெ., | : | திரு. சக்திவேல் | வயது | : | 54 |
| க/பெ. | : | திரு. | | | |
| கிராமம் | : | வத்தக்கவுண்டன்வலசு | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 24.03.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி. நான் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து வழக்கறிஞராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் மூத்த வழக்கறிஞர் சின்னச்சாமி அவர்களிடம் இளம் வழக்கறிஞராக இருந்து பயிற்சி பெற்றேன். 16 வருடங்கள் மூத்த வழக்கறிஞரிடம் பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் தான் தயார் செய்தேன். எழுதிக்கொடுத்தவர் சக்திவேல் என்பவரை எனக்கு தெரியும். எப்படி தெரியும் என்றால் மேற்படி சக்திவேல் எனது மூத்த வழக்கறிஞருக்கு குடும்ப நண்பர், மேலும் கட்சிக்காரர் ஆவார். வா.சா.ஆ.1-ல் 1 மற்றும் 2 பக்கங்களில் சக்திவேல் கையொப்பம் செய்துள்ளார். 3-வது பக்கத்தில் சக்திவேலின் கையொப்பம் இல்லை, விடுபட்டுள்ளது. சக்திவேலின் கையொப்பம் எனக்கு ஓரளவுக்கு தெரியும். வா.சா.ஆ.1-ல் முதலாம் தாளின் பின்பக்கத்தில் சக்திவேல் என்று உள்ள கையொப்பம் என் முன்னிலையில் இடப்படவில்லை. மேற்படி கையொப்பம் என் முன்னிலையில் இடப்படாததால் சக்திவேலின் கையொப்பம் தானா என உறுதியாக கூற இயலவில்லை. அது சக்திவேலின் கையொப்பம் போல் தான் உள்ளது. மேற்படி ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் எனது மூத்த வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. மேற்படி தேதியில் முன்பணம்

கொடுக்கப்பட்டதா என்றால் தொகை விபரங்களை எனது மூத்த வழக்கறிஞர் முன்னிலையில் வைத்து பேசிக்கொண்டு, சக்திவேல் வாங்கிக்கொண்டார்.

<u>**2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**</u>

1. நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். கடந்த 05.01.2007 அன்று கிரைய உடன்படிக்கையைப் பொறுத்து சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. அந்த அழைப்பாணையில் காலக்கெடு நீட்டிப்பு சம்மந்தமாக சாட்சி சொல்வது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மூத்த வழக்கறிஞர் சின்னச்சாமி அவர்களிடம் 1997 ஆம் வருடத்திலிருந்து 2013 ஆம் வருடம் வரை இளம் வழக்கறிஞராக பணிபுரிந்து வந்தேன். அதன்பிறகு தனியாக அலுவலகம் ஏற்படுத்திக்கொண்டேன். வா.சா.ஆ.1–ல் S. சண்முகவேல், முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் இருந்து முத்திரைத்தாள் 29.11.2006 ஆம் தேதி வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. 29.11.2006 ஆம் தேதி முத்திரைத் தாள் வாங்கப்பட்டு 05.01.2007 அன்று தான் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2006 என்று தட்டச்சு செய்யப்பட்டு, 2007 என திருத்தப்பட்டுள்ளதற்கு எந்தவிதமான குறிப்பும் கிரைய உடன்படிக்கையில் இல்லை. முத்திரைத்தாளின் பின்புறத்தில் யார் முன்னிலையில் பணம் கொடுத்தது, சாட்சிகள் உள்ளிட்ட எந்த விபரக்குறிப்புகளும் இல்லை என்றால் என் முன்னிலையில் எழுதப்படவில்லை. 3–ம் பக்கத்தில் எழுதிக்கொடுப்பவர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 3–ம் பக்கத்தில் சாட்சிகளின் தகப்பனார் பெயர்கள் மற்றும் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3. சக்திவேலுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பெண் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை என்றால் அவ்வாறு பெண் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி ஆவணம் எழுதப்படவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பை வாதிக்கு S. அன்வர்தீன் என்ற வழக்கறிஞர் தான் அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பை சக்திவேலுக்காக எனது மூத்த வழக்கறிஞர்

சின்னச்சாமி அவர்கள் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4—ல் இருப்பது எனது மூத்த வழக்கறிஞரின் கையொப்பம் தான்.

4. அந்த அறிவிப்பை 06.04.2007—ல் வழக்கறிஞர் அன்வர்தீன் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் சக்திவேலின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். உடன்படிக்கையில் உள்ள பணப்பரிவர்த்தனைகள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் பேசிக்கொண்டது எனக்கு தெரியும், முன்பணம் கொடுத்ததும் எனக்கு தெரியும். 1, 2 பக்கங்களிலும் காலக்கெடுவிலும் உள்ள கையொப்பங்கள் வேறுபட்டிருப்பதாகச் சொன்னால் என்னால் அதுகுறித்து சரியாகக் கூற இயலாது. என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு மேற்படி ஆவணத்தை வாதி மோசடியாக தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கு அருகில் வாதியின் சொத்து இருப்பதால், வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற தீய எண்ணத்தில் தாவா தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் வழக்கு சொத்தின் அருகில் வாதியின் சொத்து உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது.

5. என் மூத்த வழக்கறிஞர் 1—ம் பிரதிவாதி சக்திவேலுக்காக வழக்கு நடத்தினாரா என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை, சக்திவேலின் தகப்பனாருக்காக வழக்கு நடத்தியுள்ளார். எனது மூத்த வழக்கறிஞர் 2021 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். பதில் அறிவிப்பில் கதவு எண்.21 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கதவு எண்.108 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் அலுவலகத்தின் பழைய கதவு எண்.108, புதிய கதவு எண்.21. சக்திவேலை எனக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும் என்றால் 1997 ஆம் ஆண்டு முதல் தெரியும். அவரது சொத்துக்கள் மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.03.24 19:39:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.